2014 பிப்ரவரி 20] [திரு. கே.ஏ. ஜெயபால்]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு, மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்டுள்ளதற்கு பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர் ஏற்றம் பெற ஏட்டில் அடங்கா எண்ணற்ற திட்டங்கள், எடுத்தியம்ப நேரமில்லை.*

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மக்களைப் பற்றியே எப்போதும் நினைப்பு, அந்த நினைப்பே இந்த அரசின் வனப்பு. அமுதூட்டும் அம்மா உணவகங்கள், இன்றைக்கு இராஜஸ்தானிலும், கர்நாடகாவிலும்!

'மிச்சப்படுத்து காலத்தை, அதிகப்படுத்து உன் படிப்பின் நேரத்தை' என்று சொல்லி, நம் அன்னையின் மிதிவண்டி வழங்கும் திட்டம், இன்றைக்கு கர்நாடகம் தொடங்கி பீகார் வரை!

அறிவூட்டும் அம்மா மடிக் கணினித் திட்டம், உபி. தொடங்கி, இன்னும் பிற மாநிலங்களிலும்! இப்படி அம்மாவின் அரசாட்சியைப் பிற மாநிலங்களும் பின்பற்றி நடக்கின்றன. இன்றைக்கு இந்தக் கூட்டம் முடிந்து நாடாளுமன்றத் தேர்தலை நோக்கிச் செல்ல இருக்கிறீர்கள்.

இமயம் நீருக்குள்ளும், இந்துமாக் கடல் நிலமாகியும், நின்ற காலத்தே வாழ்வாங்கு வாழ்ந்து, வரலாறு கண்டவன் தமிழன்! (மேசையைத் தட்டும் ஒலி)

ஏனையோர் உண்ணவும், உடுக்கவும் அறியாத காலத்தே, எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கொண்டவன் தமிழன், மீனும், வில்லும், புலியும் பொறித்த கொடிகளைப் பட்டொளி வீசிப் பறந்திட வைத்தே, பார் வியக்க செழித்தவன் தமிழன்!

மாண்புமிகு அம்மா, தங்களிடம், கலவரம் இல்லா பூமியாக்கி, காந்தி தேசத்தை அமைதிப் பூங்கா ஆக்கிடும் துணிவு, வாடி நிற்கும் மக்களின் வாட்டம் போக்கும் பரிவு, மனத்தால், இனத்தால், மக்களைப் பிரித்தே பார்க்காமல் இந்தியன் என்னும் ஒற்றைச் சொல்லில் இருக்கும் மக்களை இணைத்துப் பார்க்கும் தாய்மை, நடக்கும் நதிகளை இணைக்கத் துடிக்கும் தாராள ஆளுமை குணம் கொண்ட நம் பாசத் தாயின் பற்றற்ற கரங்களில், பாரதத்தின் அதிகாரம் வருகின்ற காலம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் திருநாட்டை அனைத்திலும் முதலாக்கும் என்றே உலகெங்கும் வாழ்பவர் உரைக்கின்றார்.

நாற்பதிலும் வெல்ல, நம் நிலையும் உயர்கிறது. அமைதி, வளம், வளர்ச்சி எனும் அம்மாவின் முயற்சி! அன்னையர் நாட்டிற்கும் ஆக்கிடுமே எழுச்சி! (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்னும் முந்தைய கதைகள் முடிவுக்கு வருகின்றன. தெற்கு செழிக்கிறது, தமிழகம் தழைக்கிறது என்னும் நிலைக்குக் காரணியான செந்தமிழ்த் தாயை செங்கோட்டை இரு கரம் நீட்டி அழைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நம் தமிழ் அன்னையை உயர் அரியணையில் அமர்த்திட வேண்டி, உங்களோடு நானும் இறைவனிடம் வேண்டுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)